**அலுவலக குறிப்பு:–** அ) வரிசை எண்.1,2,3,6,7,8,9 மற்றும் 11 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு திரு.எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

ஆ) வரிசை எண்.4 மற்றும் 5–ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு திரு.ஆர்.இசைசெல்வமூர்த்தி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

இ) வரிசை எண்.10–ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு திரு.எம்.அஞ்சவிஅம்மாள், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

வரிசை எண்.12–ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு திரு.ஆர்.கலாவதி, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்

ந.க.எண்502/இ1/2022

**தீர்மான எண்.48. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

43. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022-23-ம் ஆண்டு நகராட்சி நிர்வாக துறை மான்யக்கோரிக்கையில் நகராட்சிகளில் பழதடைந்த நிலையில் உள்ள சமுதாய கழிப்பிடங்களை புதுப்பிக்க அறிவிப்பு வெளியிட்டதன் அடிப்படையில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் பழதடைந்த நிலையில் உள்ள சமுதாய கழிப்பிடங்களை புதுப்பிக்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி திட்டபிரேரணை நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகரமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ,எண் | இடத்தின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ,இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பாவேந்தர் தெரு | 4,00 |
| 4 | வி.ஏ.கரீம் ரோடு | 3,00 |
| | மொத்தம் | 7,00 |

**அலுவலக குறிப்பு :1.**மன்றம் அனுமதிக்கலாம்

2.மொத்த மதிப்பீடு தொகை ரூ. 7.00 இலட்சத்தினை முழுமான்யமாக பெற மன்றம் அனுமதிக்கலாம்.

3.மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களிடம் பெற உரிய முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்(இ1/923/2022)

**தீர்மான எண்.49. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

44. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சான்றோர்குப்பம் பகுதியில் உள்ள 4 வார்டுகளிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை பிரித்து எடுக்கவும், உரம் தயாரிக்கவும் வேண்டி, சான்றோர்குப்பம் சாலையில் உள்ள கானாற்று கால்வாய் அருகே புதியதாக OCC அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1000/இ1/2022

**தீர்மான எண்.50. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

45. இந்நகரமன்ற கூடத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒலி பெருக்கி சாதனங்களான ஆம்பிளிபையர், ஸ்பீக்கர், Cardless Mic. Stand Mic போன்ற சாதனங்கள் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்டவையாகும். இவை அனைத்தும் தற்போது பழுதடைந்து உபயோகபடுத்த இயலாத நிலையிலும் உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள ஒலி பெருக்கி சாதனங்களை புதியதாக வாங்கி பொருத்தவும், அதற்காகும் தோராய செலவு தொகை ரூ.1,15,000/-க்கும் மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது. மேலும் அவசியம் கருதி ஒலி பெருக்கி சாதனங்கள் சப்ளை செய்ய விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் விவரம் | விலைப்புள்ளி தொகை.ரூ. |
|---|---|---|
| 1 | AMS எலக்ட்ரானிக்ஸ்<br>எண்.1/2, புதிய மாநகராட்சி எதிரில்,வேலூர்.1 | 1,13,305/- |
| 2 | டி.பிரகாஷ் சவுண்ட் சர்வீஸ்,<br>நெ.20/3ஏ, வள்ளுவர் தெரு,<br>நடராஜபுரம், ஆம்பூர் | 1,15,300/- |

அலுவலக குறிப்பு:–அ. நகரமன்றத்திற்கு புதியதாக ஒலி பெருக்கி சாதனங்களை வாங்கவும், அதற்காகும் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ.மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் வேலூர், AMS எலக்ட்ரானிக்ஸ் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.களண்.805/இ1/2022
**தீர்மான எண்.51. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

46. இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட எஸ்.கே. ரோடில் நகராட்சிக்கு சொந்தமான பொறியாளர் குடியிருப்பு மற்றும் வணிக வளாகம் அமைந்துள்ளது. மேந்படி பொறியாளர் குடியிருப்பு மற்றும் கடைகளின் தரைதள பகுதி மற்றும் நுழைவு வாயிலில் உள்ள தரை பகுதி ஆகியவற்றை எலிகள் வலை தோண்டி சேதப்படுத்தியுள்ளது. எனவே புதியதாக தரைதளம் அமைக்கவும், குடிநீர் வசதி, மின்சார வசதி & வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் பொறியாளர் குடியிருப்பிற்கு எதிரில் உள்ள பணக்கார தெரு மற்றும் எஸ்.கே. ரோடு சந்திப்பில் பழுதடைந்துள்ள சிறுபாலத்தை அகற்றி புதியதாக சிறுபாலம் அமைக்கவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:**–அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1001/இ1/2022
**தீர்மான எண்.52. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

47. 2022–ஆம் ஆண்டு ரம்ஜான் பண்டிகை முன்னிட்டு, ஆம்பூர் நகர மன்றத்தின் சார்பாக ஆம்பூர் நகரில் வசிக்கும் இஸ்லாமிய பெருமக்களுக்கு ரமலான் நல்வாழ்த்துகளை தெரிவிக்கும் வகையில் வாழ்த்து தெரிவித்து கீழ்குறிப்பிட்டுள்ள நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணத்தொகையை அந்தந்த நாளிதழ்களுக்கு செலுத்த மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் விவரம் | விளம்பர கட்டணத்தொகை .ரூ |
|---|---|---|
| 1 | தினமணி | 28350/– |
| 2 | தினதந்தி | 26460/– |
| 3 | தினமலர் | 26460/– |
| 4 | தி இந்து(ஆங்கிலம்) | 25200/– |
| 5 | இந்து தமிழ் திசை | 12800/– |
| 6 | தினகரன் | 21840/– |
| 7 | மாலைமுரசு | 16800/– |
| 8 | மாலை மலர் | 18900/– |
| 9 | மாலை தமிழகம் | 14700/– |

**அலுவலக குறிப்பு:**–அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி விளம்பர கட்டணத்தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.999/இ1/2022
**தீர்மான எண்.53. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

48. ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13 கஸ்பா.பி மெயின் ரோடில் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள நகர் நல மையம் பக்கத்தில் சுமார் 30 ஆண்டுகளாக பழமை வாய்ந்த உயிருள்ள பூமரம் அபாயகரமான நிலையில் நகர் நல மைய கட்டிடத்தின் மீது சாய்ந்து அழுத்துவதால் கட்டிடம் சேதமடைந்து மரம் விழுந்துவிடும் நிலை உள்ளதால் நகர் நல மையத்திற்கு வருபவர்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் மேற்படி மரத்தினை அகற்றிட வாணியம்பாடி வருவாய் கோட்டாச்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.கஎண்.அ5/1191/2022 நாள்.23.03.2022.ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே,மேற்படி மரத்தினை அகற்றிட 13.04.2022-ம் தேதி அன்று பொது ஏலம் விடப்பட்டதில் திரு.பி.பழனி த/பெ.பன்னீர் செல்வம், கன்னிகாபுரம், கெங்காபுரம் அஞ்சல், ஆம்பூர் என்பவர் உயர்ந்த பட்ச ஏலத்தொகை ரூ.3000/-க்கு (ரூபாய் மூவாயிரம் மட்டும்) கோரியுள்ளதை உறுதி செய்ய மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- அ.அங்கீகாரம் வழங்கலாம்.**

ஆ. மேற்படி மரத்தினை உடன் அகற்றப்பட வேண்டிய அவசியம் கருதி நகர மன்றத்தலைவர் அவஙரகளின் முன் அனுமதி பெற்று மரத்தினை அகற்ற பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை எடுத்தமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1324/இ1/2021

**தீர்மான எண்.54. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

49. இந்நகராட்சியில் 15-வது நிதிக்குழு மான்யம் 2021-22 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத (Un-Tied Grant) நிதியில் கீழ் காணும் பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித எண்: 31118/2021./ அம்ரூட்- 2 நாள்: 05.01.2022-ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், அப் பணிகளுக்கு 08.04.2022அன்று இரு உறை முறையில் ஓப்பந்தப்புள்ளிகள் கோரியதில் ஓவ்வொரு பணிக்கும் இரண்டு ஓப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி ஓப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஓப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதியினை ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த ஓப்பந்ததாரர்களின் விலை விவர ஓப்பந்தப்புள்ளிகளை(PRICE BID) 20.04.2022-ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி வாய்ந்த ஓப்பந்ததாரர்கள் வழங்கியுள்ள விலை விவர ஓப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட் சத்தில்) | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பெத்லகேம் 1-வது தெருவில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிமெண்ட் கான்கீரீட் தளம் மைத்தல் | 21.00 | 1, .எம்.தீனதயாளன் | 0,07% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s.RDS டெவலப்பர்ஸ் & புரமோட்டர்ஸ் | 1,20% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | பெத்லகேம் 4-வது தெருவில் மழைநீர் வடிகால்வாயுடன் கூடிய சிமெண்ட் கான்கீரீட் தளம் மைத்தல் | 50.00 | 1, M/s.RDS டெவலப்பர்ஸ் & புரமோட்டர்ஸ்<br><br>2.எம்.தீனதயாளன் | 0,05% மதிப்பீட்டை விட கறைவு<br>1,15% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | பெத்லகேம் 7-வது தெருவில் சிமெண்ட் கான்கீரீட் தளம் மைத்தல் | 33.00 | 1.ஏ.வி.நாகராஜன்<br><br>2.எஸ்.அருணாசலம் | 0,06% மதிப்பீட்டை விட கறைவு<br>1,15% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**அ) வரிசை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு திரு.எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ)வரிசை எண்.2-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு M/s.RDS டெவலப்பர்ஸ் & புரமோட்டர்ஸ், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்

இ) வரிசை எண்.3-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு திரு. ஏ.வி.நாகராஜன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்

( ந,களண்,1435/இ1/2021)

**தீர்மான எண்.55. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

50. நகராட்சி நிர்வாக இயக்குநர், இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5990/2022/SBM நாள்.11.04.2022-ல் ஆம்பூர் நகராட்சியில் 2021-22-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 திட்டத்தில், 2 இடங்களில் 32 இருக்கைகள் கொண்ட சமுதாய கழிப்பிடங்கள் கட்டவும், 6 இருக்கை சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டவும் நிதி ஓதுக்கீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதின்பேரில், மேற்படி திட்டத்தில் கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்கள் கட்டவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | மத்திய அரசு பங்குத்தொகை 33% | மாநில அரசு பங்குத்தொகை 22% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.11-ல் கஸ்பா.பி.மெயின் ரோடில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் | 24.96 | 7.92 | 5.28 |
| 2 | வார்டு எண்.13-ல் கஸ்பா.பி மெயின் ரோடில் நகராட்சி பள்ளி அருகில் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் | 24.96 | 7.92 | 5.28 |
| | மொத்தம் | 49.92 | 15.84 | 10.56 |

அலுவலககுறிப்பு:-அ.மேற்படி திட்டத்தில் மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை எடுத்துக்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ.மேற்படி திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக மீதி தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.கஎண்.841/இ1/2022

**தீர்மான எண்.56. மேற்படி பொருளில் வரிசை எண்.1ன்-ல் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு பதிலாக கன்னிகாபுரம் காலனி(கெங்காபுரம்) பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது.**

51. ஆம்பூர் நகராட்சின் பாதாள சாக்கடை திட்டம் தொர்பாக, இணைப்புதாரர்களிடமிருந்து பராமரிப்பு கட்டணம் மற்றும் வைப்பு தொகை ஆகியவற்றிற்கான பாதாள சாக்கடை திட்ட உபவிதிகளின்படி வசூலிக்க இந்நகரமன்ற தீர்மானம் என்.42, நாள்,28.05.2020ல் அனுமதி வழங்கியதின் பேரில் பாதாள சாக்கடை உபவிதிகளுக்கு பொது அங்கீகாரம் வழங்க கோரி 31.08.2021ம் தேதியன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு 27.12.2021ம் தேதியன்று நகாட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களால் பொது அங்கீகாரம் (General Approvel) வழங்கியதின் பேரில் மேற்படி கட்டண விவரங்களை தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய கோரியதற்கிணங்க 30.03.2022ம் தேதியன்று தினதந்தி தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ9,374/-ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை தினதந்தி தமிழ் தினசரி நாளிதழ் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்

(ந.க.எண்.1742/2016/இ2

**தீர்மான எண்.57. அங்கீகரிக்கப்பட்டது.**

52. ஆம்பூர் நகராட்சின் பாதாள சாக்கடை திட்டம் தொர்பாக, இணைப்புதாரர்களிடமிருந்து பராமரிப்பு கட்டணம் மற்றும் வைப்பு தொகை ஆகியவற்றிற்கான பாதாள சாக்கடை திட்ட உபவிதிகளின்படி வசூலிக்க இந்நகரமன்ற தீர்மானம் என்.42, நாள்,28.05.2020ல் அனுமதி வழங்கியதின் பேரில் பாதாள சாக்கடை உபவிதிகளுக்கு பொது அங்கீகாரம் வழங்க கோரி 31.08.2021ம் தேதியன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு 27.12.2021ம் தேதியன்று நகாட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களால் பொது அங்கீகாரம் (General Approvel) வழங்கியதின் பேரில் பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான பராமரிப்பு கட்டணம் மற்றும் வைப்பு தொகை கட்டணங்களின் விவரம் 30.03.2022ம் தேதியன்று தினதந்தி தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 21 நாட்கள் முடிவுற்று இதுநாள் வரையில் பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணை ஏதும் வரப்பெறாததால் (Final Approvel) இறுதி அங்கீகாரம் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்க மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**-மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்

(ந.க.எண்.1742/2016/இ2

**தீர்மான எண்.58. அங்கீகரிக்கப்பட்டது.**

53. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சாலைவரி காப்பீட்டு தொகை ,தகுதிச்சான்று, பசுமைவரி மற்றும் சுங்கச்சாவடி கட்டணம் ஆகியவற்றை ஓராண்டிற்கு 2022-23ம் ஆண்டிற்கு செலுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.3.00இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**வாகனங்களின் விவரம்**

| வ.எண் | வாகனம் எண் | பயன்பாட்டு விவரம் |
|---|---|---|
| 1 | TN.23BX3308 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 2 | TN.23K0018 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 3 | TN.83Y9506 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 4 | TN.23W8626 | குடிநீர் லாரி |
| 5 | TN.23Y8707 | குடிநீர் டிராக்டர் |

**அலுவலகக்குறிப்பு:-** அங்கீகாரம் வழங்கலாம்

(ந.க.எண். 985/2022/இ2.)

**தீர்மான எண்.59 அங்கீகரிக்கப்பட்டது.**

54. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் நகராட்சி பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி பராமரிப்பு பணிக்கு 2022-2023ம் ஆண்டிற்கு தேவையான தெருவிளக்கு மின் உபகரணங்கள் கற்பகம் சிறப்பு அங்காடி, வேலூர் அவர்களிடமிருந்து வாங்கிகொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** அங்கீகரிக்கலாம்

ந.க.எண். 984/2022/இ2.

**தீர்மான எண்.60. அங்கீகரிக்கப்பட்டது.**

**55. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.எம்.நகர் மலைமேடு வார்டு-பி, பிளாக்-27 நகரளவு எண்.1/1ஏ1 என்ற இடத்தில் சுகாதார மையம் அமைய உள்ள இடத்தில் மின்கம்பம் அமைந்துள்ளதை மாற்றி அமைக்க DCW விண்ணப்பம் வழங்கவும், மேலும் மேற்படி மின்கம்பத்தினை மாற்றி அமைக்க மதிப்பீடு தயார் செய்து வழங்க கோரியதற்கிணங்க, உதவி மின் பொறியாளர், இ & ப / கிழக்கு தமிழ்நாடு மின்சார வாரியம், ஆம்பூர் அவர்களின் 18.04.2022ம் தேதிய கடிதத்தில் மின்கம்பத்தினை மாற்றி அமைக்க தொகை ரூ.24,500/-ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையை மின் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:-1.**மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்படி பணி உடன் மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.851/2021/இ2.

**தீர்மான எண்.61. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

56. இந்நகராட்சி வார்டு எண்.01 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளையும் மற்றும் உயர் கோபுர மின்விளக்குகளையும் மூன்று மாத காலத்திற்கு தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 27.01.2021ம் தேதி திரு. எம்.தீனதயாளன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணிவுத்திவு வழங்கப்பட்டு தற்போது 30.04.2022ம் தேதியன்று ஒப்பந்த காலம் முடிவுறும் நிலையில் உள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு 1.05.2022 முதல் 31.07.2022 வரையில் மூன்று மாத காலத்திற்கு அதே மதிப்பீட்டில் அதே ஒப்பந்த்தார்ர் திரு. எம்.தீனதயாளன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு அதே ஒப்பந்த விலைவிகித பட்டியலின்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தகாலம் நீடிப்பு செய்து பணிவுத்திரவு வழங்கியதை மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது

**அலுவலக குறிப்பு:– அங்கீகரிக்கலாம்.**

(ந.க.எண்.840/2021/இ2

**தீர்மான எண்.62. அங்கீகரிக்கப்பட்டது.**

57. இந்நகராட்சி வார்டு எண்.13 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளையும் மற்றும் உயர் கோபுர மின்விளக்குகளையும் மூன்று மாத காலத்திற்கு தனியார் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 27.01.2021ம் தேதி திரு. எம்.தீனதயாளன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணிவுத்திவு வழங்கப்பட்டு தற்போது 30.04.2022ம் தேதியன்று ஒப்பந்த காலம் முடிவுறும் நிலையில் உள்ளது. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு 1.05.2022 முதல் 31.07.2022 வரையில் மூன்று மாத காலத்திற்கு அதே மதிப்பீட்டில் அதே ஒப்பந்த்தார்ர் திரு. எம்.தீனதயாளன், நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு அதே ஒப்பந்த விலைவிகித பட்டியலின்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தகாலம் நீடிப்பு செய்து பணிவுத்திரவு வழங்கியதை மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது

**அலுவலக குறிப்பு:–மன்றம் அங்கீகரிக்கலாம்.**

(ந.க.எண்.840 /2021/இ2

**தீர்மான எண்.63. அங்கீகரிக்கப்பட்டது.**

58. இந்நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்ளுக்கு 20.05.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்) இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 7. | நகராட்சி எல்லைக்குட்பட்ட சாமியார்மடம் பகுதியில் அமைந்துள்ள 32.75இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தடைமட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் அரசு உத்திரவின் படி Sodium Hypo chlorite Solution (Bleaching liquid) liquid concentration powder 4 to 6% (Grade -1) basis as per IS 11673-1992-ஐ சப்ளை, அதற்கு தேவையான உதிரிபாகங்கள் மற்றும் பராமரிப்பு பணி. | 9.95 | 1.ஸ்ரீ ராஜா கணபதி என்ஜினரிங் ஒர்க்ஸ்<br>2.ஸ்ரீ சபரி என்ஜினரிங் | 0.60% மதிப்பீட்டை விட குறைவு<br>2.41% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு.:;**-மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள .ஸ்ரீ ராஜா கணபதி என்ஜினரிங் ஒர்க்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்(979/இ2/2022)

**தீர்மான எண்.64. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

59. ஆம்பூர் நகராட்சிக்கு CWSS மூலம் குடிநீர் பெறப்பட்டு வந்த நிலையில், பாலாற்று பகுதியில் குடிநீர் பைப்லைனில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் CWSS மூலம் பழுது பார்க்கும் பணி 05.03.2022 முதல் 08.03.2022 வரை நடைபெறுவதால் ஆம்பூர் நகர பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத காரணத்தினால், மதீப்பீடு தொகை ரூ.1.20இலட்சத்தில் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) வார்டு எண்.01 முதல் 36 வரையுள்ள பகுதிகளுக்கு தனியார் டிராக்டர் 6000கொள்ளவு கொண்ட டேங்கர் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு 04.03.2022ம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ் வருமாறு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை ரூ<br>டிராக்டர் 6000கொள்ளவு கொண்ட டேங்கர் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய (1 Load) |
|---|---|---|
| 1 | எம்.சுதாகர்.<br>முத்து எண்டர்பிரைசஸ்,<br>No,14.எம்,சி.ரோடு.கன்னிகாபுரம்<br>கெங்காபுரம்,ஆம்பூர் | ரூ.600/- |
| 2. | டி.பி.பழனி.<br>முருகன் சப்ளையர்ஸ்,<br>கன்னிகாபுரம் கெங்காபுரம்,ஆம்பூர் | ரூ.650/- |
| 3. | எஸ்.பன்னீர் செல்வம்.<br>எஸ்.எல்.எஸ். டிரேடர்ஸ். சான்றோர்குப்பம் ஆம்பூர் | ரூ.700/- |

மேற்குறிப்பிட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. எம்.சுதாகர். முத்து எண்டர்பிரைசஸ், No,14.எம்,சி.ரோடு கன்னிகாபுரம் கெங்காபுரம், ஆம்பூர் என்பவர் மூலம் மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதை மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண்.598/இ2/2022)

**தீர்மான எண்.65. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**60,** இந்நகராட்சி பொது சுகாதார பணியான திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான **210** எண்ணிக்கையிலான தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக் கூலி பட்டியல் அடிப்படையில் L.D man power solution (P) LTD vellore என்பவர் சப்ளை செய்து வருகிறார், மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமானது **30.09.2020**ம் தேதியுடன் முடிவுபெற்றது. மேலும் மேற்படி பணிக்கு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிவைக்கப்பட்டு உத்தரவு பொற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புதிய ஒப்பந்துபுள்ளி கோர நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி கிடைக்க வேண்டியிருப்பதாலும், பொதுசுகாதார பணியின் அவசியம் கருதியும் ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும்

நிறுவனத்தின் மூலம் **30.04.2022** வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கால அவகாசம் தேவைபடுவதால் ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் L.D. Man Power Solution Vellore, நிறுவனத்தின் மூலம் மேலும் **3** மாத காலத்திற்கு அதவாது **(01.05.2022** முதல் **31.07.2022** வரை) இப்பணியினை அதே விலைவிகிதத்தில் **210** தினக்கூலி பணியாளர்களை சப்ளை செய்ய வேண்டி மேற்படி நிறுவனத்திற்கு **3** மாதகாலத்திற்கு பணிநீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.**90.00** லட்சத்திற்க்கு மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**(அ) திடக்கழிவு மேலாண்மை பணியின் அத்தியாவசியம் கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் L.D. Man Power Solution Vellore, நிறுவனத்தின் மூலம் 03 மாதக் காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்காகும் தோரய செலவினத் தொகையினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.695/எச்1/2018.**

**தீர்மான எண்.66. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

61, இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நகராட்சி பகுதிகளில் தினசரி சேகரம் செய்யப்படும் குப்பைகள் மற்றும் கால்வாய் மண் ஆகியவற்றை இந்நகராட்சி வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்க்கு எடுத்து செல்லப்படுகிற்து, மேற்படி வாகனங்களை இயக்க போதிய நகராட்சி பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் வாகனங்களை இயக்க தேவையான 15 எண்ணிக்கை பணியாளர்களை L.D man power solution (P) LTD vellore ஒப்பந்ததாரர் மூலம் 30.04.2022 வரை பணி மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றது.

புதிய ஒப்பந்தபுள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி கிடைக்க வேண்டியிருப்பதாலும், பொதுசுகாரதார பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு பணியாளர்களை பணி அமர்த்திக் கொள்ள அனுமதி வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால், மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து மேலும் 03 மாத காலத்திற்க்கு (01.05.2022 முதல் 31.07.2022 வரை) ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் அதே ஒப்பந்ததாரரை கொண்டு அதே விலை விகிதத்தில் பணியினை தெடர்ந்து மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 7.50 லட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>1.**திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மூலம் பணியினை 04 மாத காலத்திற்க்கு மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க. எண் 1250/2020/எச்1)

**தீர்மான எண்.67. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**62**, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட **36** வார்டுகளில் டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யா மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் தடுப்பு முன்எச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்ள, தேவையான **80** எண்ணிக்கையிலான தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியல் அடிப்படையில் திருவாா். L.D. manpower solution pvt.ltd, என்ற நிறுவனத்தின் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிக்கு மன்றத்தின் அங்கீகாரம் பெற்று **30.04.2022** வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய ஒப்பந்தபுள்ளி கோர கால அவகாசம் தேவைப்படுவதால், மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் M/s.L.D.manpower solution, vellore நிறுவனத்தின் மூலம் பணியினை மேலும் 3மாத காலத்திற்கு **(01.05.2022** முதல் **31.07.2022** வரை) பணி நீட்டிப்பு செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.**30.00** இலட்சம் மட்டும் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>(அ) மேற்படி பணியின் அவசியத்தை கருதி **3** மாதக் காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிமேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) மேற்படி பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1070/எச்1/2020**

**தீர்மான எண்.68. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

63, இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத் தொகைக்கும் அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 06 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல் . | 5.00 |
| 2. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 07 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 |
| 3. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல் . | 5.00 |
| 4. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல் | 5.00 |
| 5. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 |
| 6. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 31 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 |

மேற்கண்ட பொதுசுகாதார பணிகளின் அவசியத்தை கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மேற்படி பணிகளை மேற்கொள்ள நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று 06.05.2022–ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்க்கும் வைக்கப்படுகின்றது.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திரு /திருமதி | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 06 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல் . | 5.00 | 1. எஸ். நீலாவதி<br>2. எம். தீனதயாளன் | 0,35% மதிப்பீட்டு தொகையை விட குறைவு<br>0,99% மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |
| 2. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 07 முதல் 12 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 | 1. எஸ். நீலாவதி<br>2. எம். தீனதயாளன் | 0,35% மதிப்பீட்டு தொகையை விட குறைவு<br>0,99% மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |
| 3. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 13 முதல் 18 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல் . | 5.00 | 1. கே. சுகுமார்<br>2. சி.எஸ். ரமேஷ் | 0,43% மதிப்பீட்டு தொகையை விட குறைவு<br>1,15% மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |
| 4. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 19 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 | 1. கே. சுகுமார்<br>2. சி.எஸ். ரமேஷ் | 0,43% மதிப்பீட்டு தொகையை விட குறைவு<br>1,15% மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |
| 5. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 | 1. எஸ். நீலாவதி<br>2. எம். தீனதயாளன் | 0,35% மதிப்பீட்டு தொகையை விட குறைவு<br>0,99% மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் 31 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் உள்ள பிரதான கால்வாய்கள், மழைநீர் வடிகால்வாய்களில் நிரம்பியுள்ள மண்ணை தூர்வாருதல். | 5.00 | 1. கே. சுகுமார்<br><br>2. சி.எஸ். ரமேஷ் | 0,43% மதிப்பீட்டு தொகையை விட குறைவு<br><br>1,15% மதிப்பீட்டு தொகையை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:-1.</u> மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்தொகைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்கண்ட பணிகளுக்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

3. வரிசை எண்.1, 2 மற்றும் 5 ஆகிய பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.எஸ்.நீலாவதி என்பவரது ஒப்பந்தக்பபுள்ளியினையும், வரிசை எண்.3,4 மற்றும் 6 ஆகிய பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.சுகுமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3.பொதுசுகாதார பணிகளின் அவசியத்தை கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மேற்படி பணிகளை மேற்கொள்ள நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண் 855/2022/எச்1**

**தீர்மான எண்.69. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

64, ஆம்பூர் நகராட்சி 2018-ஆம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லை என சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெறப்பட்டுள்ளது. தற்போது நகரில் திறந்த வெளி இடங்களில் மலம் கழிக்கும் நிலை இல்லையென்றும் அடுத்த சான்று (ODF+) பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளதால் இது குறித்து பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருப்பின் தெரிவிக்க கோரியும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating ஒவ்வெரு உள்ளாட்சி அமைப்பிற்க்கும் வழங்கி வருகின்றனர். மேற்படி திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெறவும் உறுதிமொழி சான்று அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது குறித்து பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருப்பின் தெரிவிக்க கோரியும், தினசரி பத்திரிக்கை மூலம் விளம்பரம் செய்த வகையில் வரப்பெற்றுள்ள பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| வ.எண் | தினசரி பத்திரிக்கையின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | தினத்தந்தி,<br>வேலூர் | 12.298/- |
| 2. | கல் பப்ளிகேஷன்ஸ்,<br>தினகரன், வேலூர் | 9,374/- |

<u>அலுவலக குறிப்பு:-</u>அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகார
ம் வழங்கலாம்.

**(ந.க.எண். 984/2017/எச்1 )**

**தீர்மான எண்.70. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

65. இந்நகராட்சியில் 2020-2021ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.87422/- ஐ உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு செலுத்த கோரி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை வேலூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது . எனவே மேற்படி தொகையினை உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** :-மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 996/2021/எப்1)

**தீர்மான எண்.71. அனுமதிக்கப்பட்டது.**

66. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஆசாத் நகர் மற்றும் இமாம் நகர் 3-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 2 | ஜலால் ரோடு 8-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 3 | ஜலால்சபேட்டை 2-வது மற்றும் 4-வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 4 | சாணாங்குப்பம் மீர்தின் தெரு, அய்யாபிள்ளை யாகூப் தெரு மற்றும் வாத்திமனை பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 5 | கருமாரியம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால்வாய் கட்டுதல், பிள்ளையார் கோவில் தெரு கடைசியில் மழைநீர் வடிகால்வாய் மீது சிலாப் அமைத்தல் மற்றும் கஸ்பா.அ.சுடுகாடு செல்லும் சாலையின் நடு பகுதியில் (அரி சந்திரா மண்டபம்) சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 6 | கெங்காபுரம் ஏரிக்கரை 1-வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 7 | தார்வழி 3-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 8 | கே.எம்.நகர் 6-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 9 | அண்ணா நகர் மற்றும் ரபீக் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 10 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி மசூதி தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 5.00 |
| 11 | குமரேசன் தெரு சந்து, அன்னை ரமாபாய் தெரு சந்து மற்றும் மூ.கா.கொல்லை அப்துல் கலாம் தெருவில் சிறுபாலங்கள் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 12 | கிருஷ்ணா நகர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 13 | பர்ணகார 6-வது தெரு, கே.எம்.சாமி நகர் திருவள்ளுவர் தெருவில் சிறுபாலம் அமைத்தல் மற்றும் பேபி காலனி 2-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 5.00 |

| | | |
|---|---|---|
| 14 | சிவன் படை தெருவில் மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 15 | சைலப்பை உசேன் தெரு மற்றும் குலாம் மொகைதீன் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 16 | பழைய ஆஸ்பத்திரி தெரு, பழைய வாணியம்பாடி ரோடு, காங்கர்தக்கியா தெரு, புது காங்கர்தக்கியா தெரு, ஓர்வசா அலாவுதீன் தெரு மற்றும் ஆற்றங்கரை தெரு ஆகிய தெருக்களில் சிறுபாலங்கள் அமைத்தல் | 5.00 |
| 17 | காந்தி சாலை எல்லையம்மன் கோவில் பின்புற பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 18 | சுண்ணாம்புகார தெருவில் 3 எண்ணிக்கை சிறுபாலங்கள் அமைத்தல் | 5.00 |
| 19 | பூந்தோட்டம் மசூதி தெரு மற்றும் ரஹ்மான் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 20 | நாட்டாம்கார சாய்பான்சா கொல்லை 1–வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 21 | மலைமேடு 1–வது மற்றும் 2–வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 22 | ஜலால் கார்டன் பகுதியில் மழைநீர் வடிகால்வாய், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 23 | மாங்காதோப்பு, அனீப் நகர் 1–வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 24 | ஸ்ரீராமபுரம் மற்றும் கட்டைமேடு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 25 | உமர் ரோடு பிரதான சாலையில் சிறுபாலம் அமைத்தல் மற்றும் முகமதுபுரா 2–வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 26 | பங்காருசாமி நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல், காமராஜர் சாலை 4–வது தெரு சந்திப்பில் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 27 | பாவடி தோப்பு மற்றும் அரசமர பள்ளத்தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 28 | சௌராஷ்டிரபுரம் 2–வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 29 | இந்திரா நகர் தெற்கு பகுதி 1–வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல், | 5.00 |
| 30 | திரிசூல நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் பிள்ளையார் கோவில் தெரு மற்றும் எஸ்.கே.ரோடு பிரதான சாலையில் சிறுபாலம் அமைத்ததல். | 5.00 |
| 31 | சுந்தர விநாயகர் கோவில் பின்புற பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 |
| 32 | பெரியார் 1–வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் எஸ்.கே.ரோடு பிரதான சாலையில் சிறுபாலம் அமைத்ததல். | 5.00 |
| 33 | பாரதியார் நகர் பகுதிக்கு மேல் உள்ள கொல்ல கொட்டாய், மாதகடுப்பு பகுதி, இருளர்கள் வசிக்கும் இரண்டு பகுதிகள், | 5.00 |

| | | |
|---|---|---|
| | பி,ஆர்,என்,நகர் பகுதி, கண்ணதாசன் நகர் பகுதி ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள ஆழ்துளை கிணறுகளை சீரமைத்தல். | |
| 34 | பெத்லகேம் 10–வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 |
| 35 | பெத்லகேம் 8 மற்றும் 9–வது தெருவில் பழுதடைந்தள்ள மழை நீர் வடிகால்வாயினை அகற்றி புதியதாக மழை நீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் மிஷன் காம்பவுண்ட் சாலையில் சிறுபாலங்ம அமைத்தல் | 5.00 |
| 36 | கம்பிக்கொல்லை டேம் குறுக்கு தெருவில் சிமெண்ட சாலை அமைத்தல் | 5.00 |

அலுவலக குறிப்பு:– அ.மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1114/இ1/2022
**தீர்மான எண்.72. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

67. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.32454/2021/AMRUT–2 நள்.17.12.2021–ல், 2021.2022 –ஆம் ஆண்டு 15–வது நிதிக்குழு மான்யத்திட்டத்தில் நகர்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் ( Ueban Health and Wellness Centre) ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல் பணியினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், இந்கராட்சி எல்லைக்குட்பட்ட சான்றோர்குப்பம் பகுதியில் நகர்புற சுகாதார aAஆரோக்கிய மையம் கட்டுவதற்கு இந்நகர மன்ற தீர்மான எண்.190 நாள்.20.12.2021–ல் அங்கீகாரம் வழங்கப்பட்டதின் பேரில், மேற்படி பணிக்கு 12.01.2022.ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று 25.01.2022–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி பணியினை துவக்கும்போது அப்பகுதி மக்கள் நகர்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் கட்டுதல் பணிக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே, மேற்படி இடத்திற்கு பதிலாக வார்டு எண்.6–ல் கெங்காபுரம் பகுதியில் நகர்புற சுகாதார ஆரோக்கிய மையம் கட்டுதல் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–** அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1857/இ1/2021
**தீர்மான எண்.73. அங்கீகரிக்கப்பட்டது.**

68. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9. அண்ணா நகர் பகுதியில் உள்ள பொது சுகாதார வளாகமானது பழுதடைந்து பொது மக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி பொது சுகாதார வளாகத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அப்பகுதியில் கானாற்று கரையில் அமைக்கப்பட்டள்ள குடிநீர் தொட்டி ஆபத்தான நிலையில் உள்ளதை இடித்து அப்புறப்படுத்தவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று அலட்சம் மட்டம் ) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:–**அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.1108/இ1/2022
**தீர்மான எண்.74. அங்கீகரிக்கப்பட்டது.**

**69, திருமதி.எப்.ஷாஹிதா பாரூக், 2–வது வார்டு நகர மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்.**

1. 2–வது வார்டில் மளிகை தோப்பு பகுதியில் அங்கன்வாடி மைய கட்டிடம் அமைத்து தர தீர்மாளிக்க.
2. அக்சா மசூதி எதிரில் சேதமடைந்துள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலத்தை சீரமைத்து தர தீர்மானிக்க.
3. ஜட்ஜ்மனை, ஜலால் ரோடு 2–வது தெரு, ரத்தினம் நகர், துத்திப்பட்டுரோடு(எ) ஜலால் ரோடு, ஜலால் ரோடு 10– வது தெரு, ஜலால் ரோடு 4– வது தெரு, மளிகை தோப்பு க.எண்.51 முதல், ஜலால் ரோடு 8– வது தெரு, ஜலால் ரோடு 5 – வது தெரு ஆகிய தெருக்களில் கால்வாய் மற்றும் சாலைகள் அமைத்து தர தீர்மானிக்க.

**தீர்மான எண்.75. வரிசை எண்.1 முதல் 3 வரை பரிசீலனை செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**ஒம்/– பி.ஏஜாஸ் அஹமத்**
**தலைவர்**
**நகரமன்றம்,ஆம்பூர்**

/உண்மைநகல்/

ஆணையாளர்
ஆம்பூர்நகராட்சி